# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017.08.03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்)

**1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 3.00 தபாற் செலவு : ரூபா 10.00

ச.வ.ஒ 40/2017

## 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*முன்னுரை.*

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, மாகாண சபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தெட்டாமாண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அரசியலமைப்பின் 154உ என்னும் உறுப்புரையினது" என்பதிலிருந்து, "அத்தகைய சபைக்குத் தேர்தலொன்றை" என்னும் சொற்கள் வரையிலான சொற்கள் மற்றும் எண்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 154ஈஈ என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், எல்லா மாகாண சபைகளுக்குமான தேர்தலொன்றை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 005351-475 (2017/08)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*